समुद्री उत्पाद निर्यात विकास प्राधिकरण
(वाणिज्य एवं उद्योग मंत्रालय, भारत सरकार)
एम पी ई डी ए भवन, पनंपिल्ली एवन्यू
डाक पेटी सं. 4272, कौच्ची-682036, भारत
The Marine Products Export Development Authority
(Ministry of Commerce & Industry, Govt. of India)
MPEDA House, Panampilly Avenue
P.B. No. 4272, Kochi-682 036, India

फोन Phone : 2311979, 2311901, 2311854, 2311803, 2313415, 2314468, 2315065
फैक्स Fax : 91-484-2313361
E-mail : ho@mpeda.gov.in
Website : www.mpeda.com

**வரைவு பத்திரிக்கை செய்தி**

**இந்தியா 2020-21 ஆம் ஆண்டில் 11,49,341 மெட்ரிக் டன் கடல் உணவுகளை ஏற்றுமதி செய்துள்ளது**

- ***கோவிட், மந்தமான சந்தை, தளவாட சிக்கல்களால் 10.88 % குறைவு, ஆனால் கடந்த காலாண்டை விட மீண்டுள்ளது: எம்பிஈடிஏ தலைவர்***
- ***நீர்வள உயிரின வளர்ப்பு துறை சிறப்பாக செயல்பட்டுள்ளது. சிலேபி மற்றும் அலங்கார மீன்கள் ஏற்றுமதி மேம்பட்டுள்ளது***

**கொச்சி, ஜூன் 2:** கோவிட் பெருந்தொற்று மற்றும் மந்தமான வெளிநாட்டு கடல் சந்தைகள், மீண்டும் இந்திய கடல்உணவு துறையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. 2020-21 ஆம் நிதியாண்டில், 11,49,341 மெட்ரிக் டன் அளவுள்ள கடல் பொருட்களை 43,717.26 கோடி அதாவது US$ 5.96 பில்லியன் மதிப்பில் இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது. இது கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் 10.88 சதவிகிதம் குறைவாகும்.

அமெரிக்கா, சீனா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ( EU)) முன்னணி இறக்குமதியாளர்களாக உள்ளன. அந்தே நேரத்தில் பதப்படுத்தப்பட்ட இறால் முன்னணியில் உள்ளது அதற்கு அடுத்ததாக முக்கியமான ஏற்றுமதி செய்யப்படும் பொருளாக பதப்படுத்தப்பட்ட மீன்கள் உள்ளன.

2019-20 ஆம் ஆண்டில் இந்தியா 12,89,651 மெட்ரிக் டன் கடல் உணவுகளை 46,662.85 கோடி அதாவது US$ 6.68 பில்லியன் மதிப்புக்கு ஏற்றுமதி செய்தது. இது 2020-21 இல் ரூபாய் அளவில் 6.31 சதவிகிதமும் டாலர் மதிப்பில் 10.81 சதவிகிதமும் குறைவாகும். டாலர் மதிப்பில் 2020-21 ஆம் ஆண்டை விட 10.81 சதவிகிதம் குறைவாகும்.

"இந்த ஆண்டின் முதல் பாதியில் பெருந்தொற்று கடல் உணவு ஏற்றுமதியை கடுமையாக பாதித்தது, ஆனால் இது 2020-21 கடைசி காலாண்டில் மீட்சி பெற்று நன்றாக புத்துயிர் பெற்றது. மேலும், இந்த நிதியாண்டில் நீர்வள உயிரின வளர்ப்பு துறை சிறப்பாக செயல்பட்டது, ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களில் 67.99 சதவீதத்தையும், டாலர் அடிப்படையில் 46.45 சதவீதத்தையும் பங்களித்ததன் மூலம், இது 2019-20 உடன் ஒப்பிடும்போது முறையே 4.41 சதவீதம் மற்றும் 2.48 சதவீதம் அதிகம் ”என்று கடல் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் (எம்.பி.இ.டி.ஏ) தலைவரான திரு. கே.எஸ்.ஸ்ரீனிவாஸ் கூறியுள்ளார்.

இந்திய கடல் பொருள் ஏற்றுமதியில் , பதப்படுத்தப்பட்ட இறால் அளவு 51.36 சதவீதமும் மொத்த டாலர் வருவாயில் 74.31 சதவீதம் பங்களித்தது. அமெரிக்கா தனிப்பெரும் இறக்குமதியாளராகவும் (2,72,041 மெட்ரிக்) அதனை தொடர்ந்து, சீனா (1,01,846 மெட்ரிக்), ஐரோப்பிய ஒன்றியம் (70,133 மெட்ரிக்), ஜப்பான் (40,502 மெட்ரிக்), தென்கிழக்கு ஆசியா (38,389 மெட்ரிக்) மற்றும் மத்திய கிழக்கு (29,108 மெட்ரிக்) நாடுகள் உள்ளன.

இருப்பினும், 2020-21-இல் இறால் ஏற்றுமதி டாலர் மதிப்பில் 9.47 சதவீதமும், அளவில் 9.50 சதவீதமும் குறைந்துள்ளது. ஒட்டுமொத்த இறால் ஏற்றுமதியானது 4,426.19 மில்லியன் டாலர் மதிப்புள்ள 5,90,275 மெட்ரிக் டன்னாக உள்ளது. 2020-21ல் வன்னாமி (வைட்லெக்) இறால்களின் ஏற்றுமதி 5,12,204 மெட்ரிக் டன்னிலிருந்து 4,92,271 மெட்ரிக் ஆக குறைந்தது. டாலர் மதிப்பில் மொத்த வன்னாமி இறால் ஏற்றுமதியில், 56.37 சதவீதம் அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது, அதனைத் தொடர்ந்து சீனா (15.13 சதவீதம்), ஐரோப்பிய ஒன்றியம் (7.83 சதவீதம்), தென்கிழக்கு ஆசியா (5.76 சதவீதம்), ஜப்பான் (4.96

சதவீதம்) மற்றும் மத்திய கிழக்கு (3.59 சதவீதம்) நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

பிளாக் டைகர் (பெனீயஸ் மோனோடோன்) இறால்களின் முக்கிய சந்தையான ஜப்பான், டாலர் அடிப்படையில் 39.68 சதவீத பங்கைக் கொண்டிருந்தது, அமெரிக்கா (26.03 சதவீதம்), தென்கிழக்கு ஆசியா (9.32 சதவீதம்), ஐரோப்பிய ஒன்றியம் (8.95%), மத்திய கிழக்கு (6.04 சதவீதம்), சீனா (3.76) உள்ளிட்ட நாடுகளின் இறக்குமதி பங்கீடு சதவிகிதமாக உள்ளது.

பதப்படுத்தப்பட்ட மீன்களின் அளவு 16.37 சதவிகிதம் மற்றும் டாலர் வருவாயில் 6.75 சதவிகிதத்தில் ஏற்றுமதியாகி இரண்டாவது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டன, இருப்பினும் அதன் ஏற்றுமதி அளவு 15.76 சதவிகிதம் மற்றும் டாலர் அடிப்படையில் 21.67 சதவிகிதம் சரிந்தது.

சூரிமி (மீன் பேஸ்ட்) மற்றும் சூரிமி அனலாக் (சாயல்) பொருட்கள் உள்ளடக்கிய மூன்றாவது பெரிய வகையான 'பிற பொருட்கள்' முறையே அளவு மற்றும் ரூபாய் மதிப்பால் 0.12 சதவீதம் மற்றும் 0.26 சதவீதம் ஓரளவு வளர்ச்சியைக் காட்டின, ஆனால் டாலர் அடிப்படையில் 5.02 சதவீதம் குறைந்தது.

பதப்படுத்தப்பட்ட ஊசி கணவாய் மற்றும் பதப்படுத்தப்பட்ட கணவாய் மீன் ஏற்றுமதி முறையே 30.19 சதவீதம் மற்றும் 16.38 சதவீதம் குறைந்துள்ளது. இருப்பினும், பதப்படுத்தப்பட்ட பொருட்கள் அளவில் 1.47 சதவீதமாகவும் ரூபாய் மதிப்பில் 17 சதவீதமாகவும் அதிகரித்துள்ளன.

பெருந்தொற்று சூழ்நிலையில் குறைந்துள்ள விமான சரக்கு இணைப்பு காரணமாக எதிர்மறையாக பாதிக்கப்பட்டு குளிர்ந்த பொருட்கள் மற்றும் உயிருள்ள உயிரினங்களின் ஏற்றுமதி முறையே 16.89 சதவீதமும், 39.91 சதவீதமும் சரிந்தது.

समुद्री उत्पाद निर्यात विकास प्राधिकरण
(वाणिज्य एवं उद्योग मंत्रालय, भारत सरकार)
एम पी ई डी ए भवन, पनंपिल्ली एवन्यू
डाक पेटी सं. 4272, कौच्ची-682036, भारत
The Marine Products Export Development Authority
(Ministry of Commerce & Industry, Govt. of India)
MPEDA House, Panampilly Avenue
P.B. No. 4272, Kochi-682 036, India
फोन Phone : 2311979, 2311901, 2311854, 2311803, 2313415, 2314468, 2315065
फैक्स Fax : 91-484-2313361
E-mail : ho@mpeda.gov.in
Website : www.mpeda.com

கடலிலிருந்து பிடிக்கப்படும் மீன்வளங்களின் பங்களிப்பு அளவு 56.03 சதவீதத்திலிருந்து 53.55 சதவீதமாகவும், டாலர் மதிப்பில் 36.42 சதவீதத்திலிருந்து 32.01 சதவீதமாகவும் குறைந்துள்ளது. இருப்பினும், சிலேபி மற்றும் அலங்கார மீன்கள் முறையே 55.83 சதவிகிதம் மற்றும் 66.55 சதவிகித அளவு அதிகரித்துள்ளது மற்றும் டாலர் வருவாயில் 38.07 சதவிகிதம் மற்றும் 14.63 சதவிகிதம் அதிகரித்துள்ளன. சூறை மற்றும் கேரை மீன் வகைகளின் ஏற்றுமதி பங்களிப்பு 14.6 சதவீதம் அதிகரித்துள்ளது, ஆனால் அதன் டாலர் வருவாய் 7.39 சதவீதம் குறைந்துள்ளது. நண்டு மற்றும் ஸ்கம்பி ஏற்றுமதிகள் அளவு மற்றும் மதிப்பு இரண்டும் குறைந்துள்ளன.

கடலிலிருந்து பிடிக்கப்படும் மீன் வகைகளின் இறக்குமதியில் அமெரிக்கா 2,91,948 மெட்ரிக் டன் இறக்குமதியுடன், டாலர் அடிப்படையில் 41.15 சதவீத பங்கைக் கொண்டு இந்திய கடல் உணவின் முக்கிய இறக்குமதியாளராகத் தொடர்கிறது. அந்த நாட்டிற்கான ஏற்றுமதி ரூபாய் மதிப்பில் 0.48% அதிகரித்துள்ளது, ஆனால் முறையே அளவு மற்றும் டாலர் அடிப்படையில் 4.34 சதவீதம் மற்றும் 4.35 சதவீதம் குறைந்துள்ளது. பதப்படுத்தப்பட்ட இறால் அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் முக்கிய பொருளாக இருந்தது, அதே நேரத்தில் வன்னமி இறால் ஏற்றுமதி 6.75 சதவீத அளவாக உயர்ந்துள்ளது . இருப்பினும், பிளாக் டைகர் இறால்களின் இறக்குமதி முறையே 70.96 சதவீதம் மற்றும் அளவு மற்றும் டாலர் அடிப்படையில் 65.24 சதவீதம் குறைந்துள்ளது.

939.17 மில்லியன் டாலர் மதிப்புள்ள 2,18,343 மெட்ரிக் டன் கடல் உணவை இறக்குமதி செய்யும் சீனா, டாலர் வருமானத்தில் 15.77 சதவீதமும், அளவு அடிப்படையில் 19 சதவீதமும் கொண்ட இரண்டாவது பெரிய சந்தையாக உள்ளது. இருப்பினும், இந்த நாட்டிற்கான ஏற்றுமதியின் அளவு மற்றும் டாலர் அடிப்படையில் 33.73 சதவீதம் மற்றும் 31.68 சதவீதம் குறைந்துள்ளது.

फोन Phone : 2311979, 2311901, 2311854, 2311803, 2313415, 2314468, 2315065
फैक्स Fax : 91-484-2313361
E-mail : ho@mpeda.gov.in
Website : www.mpeda.com

பதப்படுத்தப்பட்ட இறால் சீனாவிற்கான ஏற்றுமதியில் முக்கிய பொருளாக உள்ளது. இது 46.64 சதவீத அளவாகவும், டாலர் வருவாயில் 61.87 சதவீதமும் ஆகும்.

டாலர் மதிப்பில் 13.80 சதவீத பங்கைக் கொண்ட மூன்றாவது பெரிய சந்தையாக உள்ள ஐரோப்பிய ஒன்றியம், பதப்படுத்தப்பட்ட இறால்களை முக்கிய பொருளாக இறக்குமதி செய்தது. இருப்பினும், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு பதப்படுத்தப்பட்ட இறால்களின் ஏற்றுமதி அளவு மற்றும் டாலர் மதிப்பில் 5.27 சதவீதம் மற்றும் 6.48 சதவீதம் முறையே குறைந்துள்ளது.

தென்கிழக்கு ஆசியாவிற்கான பங்களிப்பு டாலர் மதிப்பில் 11.17 சதவீதமாக இருந்தது. இருப்பினும், இது 2.56 சதவீத அளவும், டாலர் வருவாயில் 5.73 சதவீதமும் குறைந்துள்ளது. டாலர் அடிப்படையில் 6.92 சதவீத பங்கைக் கொண்ட ஐந்தாவது பெரிய இறக்குமதியாளரான ஜப்பானுக்கு ஏற்றுமதி 10.52 சதவீதம் அதிகரித்துள்ளது, ஆனால் டாலர் மதிப்பில் 2.42 சதவீதம் குறைந்துள்ளது.

டாலர் மதிப்பில் 4.22 சதவீத பங்கைக் கொண்ட ஆறாவது பெரிய சந்தையான மத்திய கிழக்கு நாடுகள் முறையே 15.30 சதவிகித அளவாகவும், மற்றும் டாலர் அடிப்படையில் 15.51 சதவீதமும் குறைந்துள்ளது. பதப்படுத்தப்பட்ட இறால் ஏற்றுமதியில் முக்கிய பொருளாக இருந்தது, டாலர் அடிப்படையில் 72.23 சதவீத பங்கைக் கொண்டிருந்தது.

திரு. ஸ்ரீனிவாஸ் மேலும் கூறுகையில், தொற்றுநோயைத் தவிர, பல காரணிகளும் 2020-21 காலப்பகுதியில் கடல் உணவு ஏற்றுமதியை எதிர்மறையாக பாதித்தன. உற்பத்தியின் தரப்பில், குறைந்த எண்ணிக்கையிலான மீன்பிடி நாட்கள், மெதுவான தளவாட இயக்கங்கள் மற்றும் சந்தையின் நிச்சயமற்ற தன்மைகள் காரணமாக மீன் பிடிப்பது குறைந்தது.

மீன்பிடி மற்றும் பதப்படுத்தும் தொழிற்சாலைகளில் தொழிலாளர்களின் பற்றாக்குறை, துறைமுகங்களில் பெட்டக பற்றாக்குறை, அதிகரித்த விமான சரக்கு கட்டணம் மற்றும் விமானம் கிடைக்கும் தன்மை குறைதல் என்பது ஏற்றுமதியை பாதித்தது, குறிப்பாக அதிக மதிப்புள்ள குளிர்ந்த மற்றும் உயிருள்ள பொருட்களை பாதித்தது.

வெளிநாட்டு சந்தையின் நிலைமை இன்னொரு சிக்கலாக இருந்தது. சீனாவில், பெட்டக பற்றாக்குறை, அதிகரித்த சரக்குக் கட்டணங்கள் மற்றும் கடல் உணவுப் பொருட்களின் கோவிட் சோதனை ஆகியவை சந்தையில் நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்தின. அமெரிக்காவில், பெட்டகங்களின் பற்றாக்குறை ஏற்றுமதியாளர்களுக்கு சரியான நேரத்தில் ஆர்டர்களை இயக்குவது கடினமாக அமைந்தது. HoReCa (ஹோட்டல், உணவகம் மற்றும் கபே) பிரிவை மூடியதும் தேவையை பாதித்தது. ஜப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில், கோவிட் காரணமாக ஏற்பட்ட ஊரடங்கால், ரீடெய்ல், உணவகம், பல்பொருள் அங்காடிகள் மற்றும் ஹோட்டல்களில் மக்களின் நுகர்வு மந்தமாக இருந்தது.